අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112784846
isurupaya@moe.gov.lk www.moe.gov.lk

මගේ යොමුව / எனது இல. / My Ref. ED/01/21/01/05/01

ඔබේ යොමුව / உமது இல. / Your Ref.

දිනය / திகதி / Date 2020.07. 29

**சுற்றுநிருப இலக்கம்- 20/2020**

சகல மாகாண கல்விச் செயலாளர்கள்
பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்
கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்
பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம்
சகல மாகாண கல்விப் பணிப்பாளர்கள்
சகல வலய கல்விப் பணிப்பாளர்கள்
சகல கோட்டக்கல்விப் பணிப்பாளர்கள்
ஆசிரியர் கல்லூரிகளின் அதிபர்கள்
தேசிய கல்வியல் கல்லூரிகளின் பீடாதிபதிகள்
சகல பாடசாலை அதிபர்கள்
சகல பிரிவெனாதிபதி மதகுருக்கள்
சகல அனுமதிபெற்ற தனியார் பாடசாலை அதிபர்கள்
சகல ஊட்டல் மற்றும் விசேட பாடசாலை அதிபர்கள்
சகல சர்வதேச பாடசாலை தலைவர்கள்

**கல்வி நிருவனங்களின் வளாகங்களை புகையிலை சார்ந்த உற்பத்திகள், மதுபானம் மற்றும் ஏனைய போதைப்பொருள் பாவனை, மேம்பாடு மற்றும் விற்பனை அற்ற வலயமாக உருவாக்குதல்**

பாடசாலை வளாகங்களை புகையிலை சார்ந்த உற்பத்திகள், மதுபானம் மற்றும் ஏனைய போதைப்பொருள் பாவனை, மேம்பாடு மற்றும் விற்பனை அற்ற வலயமாக உருவாக்குதல் தொடர்பாக இதற்கு முன்னர் வெளியிடப்பட்ட இலக்கம் 28/2012 மற்றும் 2012.08.30 திகதிய சுற்றுநிருபம் இத்தாள் இரத்து செய்யப்படுவதுடன், இச்சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்கு விதிகள் நடைமுறையில் இருக்கும்.

02. அதற்கமைய கல்வி அமைச்சின் கீழ் வரும் சகல நிறுவனங்களின் வளாகங்கள் மற்றும் சர்வதேச பாடசாலைகளின் வளாகங்கள் புகையிலை சார்ந்த உற்பத்திகள், மதுபானம் மற்றும் ஏனைய போதைப்பொருள் பாவனை, விற்பனை அல்லது மேம்பாடு மற்றும் அதனுடன் தொடர்புடைய நிறுவனங்களில் இருந்து அனுசரணை பெறுவது இதன் மூலம் தடைசெய்யப்படுகிறது. சட்டரீதியான மற்றும் சட்டத்துக்கு புறம்பான புகையிலை சார்ந்த உற்பத்திகள், மதுபானம் மற்றும் ஏனைய போதைப்பொருள் அல்லது போதையை ஏற்படுத்தும் ஏனைய பொருட்கள் இதன் கீழ் வரும்.

03. பாடசாலை பிள்ளைகள் அல்லது பாடசாலை சமூகத்தினரை இலக்கு வைத்து நேரடியாக அல்லது மறைமுகமாக மேற்கொள்ளப்படும் போதைப்பொருள் தொடர்பான விளம்பரங்கள் மற்றும் விற்பனையைத் தடுப்பதற்கு கல்வி நிறுவனங்களின் தலைவர்களுக்கு, அதிபர்களுக்கு மற்றும் கல்வி அதிகாரிகளுக்கு தேவையான வழிகாட்டல்கள் இச்சுற்றுநிருபத்தினூடாக வழங்கப்படுகிறது. மேலும் தாபனக் கோவையின் II ஆம் பகுதியின் பிரகாரமும், நாட்டின் பொதுவான சட்டத்தின் பிரகாரமும் செயற்பட வேண்டும்.

08 போதைப்பொருள் தடுப்பு நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்தல்

சகல பாடசாலைகளினதும்/ நிறுவனத் தலைவர்களினதும் ஆலோசனையின் அடிப்படையிலும், சகல தரப்பனரும் பங்கேற்கும் விதத்திலும் போதைப்பொருள் தடுப்பு தொடர்பாக குழுவொன்று அமைக்கப்படுவதுடன், அதன் பொறுப்பு பிரதி அதிபர் ஒருவருக்கு/ அதிகாரியொருவருக்கு வழங்கப்பட வேண்டும். பாடசாலை/ நிருவன வளாகத்தை போதைப்பொருள் பாவனையை அதைரியமூட்டும் வலயமாக உருவாக்குதல், போதைப்பொருள், சிகரட் மற்றும் மதுபான பாவனைக்கு அகப்படாத திறனை விருத்தி அடையச் செய்யும் விதமான பௌதீகச் சூழல் ஒன்றை உறுதிப்படுத்தல், புரிந்துணர்வுடன் தீர்மானங்களை எடுக்கும் திறமையை அபிவிருத்தி செய்தல் மற்றும் தனக்கும் தனது சமூகத்துக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் விடயங்களை நிராகரிக்கும் திறமையை அபிவிருத்தி செய்வதற்காக சமூகத்தை தெளிவூட்டுவதன் மூலம் அவர்களின் செயற்பாட்டு ரீதியான பங்களிப்பை பெற்றுக்கொள்ளும் விதமாக செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.

09. அனைத்துப் பாடசாலைப் பிள்ளைகளினது எதிர்காலத்தை உத்தரவாதப்படுத்தும், சமூகத்தை இப்பேரிடரிலிருந்து மீட்டெடுக்கும் தேசிய தேவைப்பாட்டினை கவனத்திற்கொண்டு இச்சுற்றுநிருபத்தில் அடங்கியுள்ள விடயங்களை உரிய முறையில் நடைமுறைபடுத்துவதன் மூலம் பாடசாலையின்/ கல்வி நிருவனத்தின் சகல உறுப்பினர்களின் சுகாதாரப் பாதுகாப்பினையும் நாட்டின் எதிர்காலத்தையும் உத்திரவாதப்படுத்துவது தங்களது பொறுப்பும் கடமையுமாகும் என்பதை வழியுறுத்துகின்றேன். மேலும் சுற்றுநிருபத்துக்கு அமைய செயலாற்றுவது பாடசாலை அதிபர்கள்/ நிறுவனத் தலைவர்களின் பொறுப்பாக அமைவதுடன், அதற்கமைய விடயங்களை மேற்கொள்ளுமாறு தயவாய் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்.எச்.எம். சிதரானந்த
செயலாளர்
கல்வி அமைச்சு

பிரதிகள்

1) ஜனாதிபதியின் செயலாளர், ஜனாதிபதி காரியாலயம் -தகவலுக்காக
2) செயலாளர், பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு -தகவலுக்காக
3) செயலாளர், சுகாதாரம் மற்றும் சுதேச வைத்திய சேவைகள் அமைச்சு -தகவலுக்காக
4) கணக்காய்வாளர் நாயகம், கணக்காய்வாளர் திணைக்களம் -தகவலுக்காக
5) சகல மாகாண பிரதான செயலாளர்கள் -தகவலுக்காக
6) சட்டமா அதிபர், சட்டமா அதிபர் திணைக்களம் -தகவலுக்காக
7) தலைவர், புகையிலை மற்றும் மதுபானங்கள் மீதான தேசிய அதிகார சபை -தகவலுக்காக
8) தவைவர், தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபை -தகவலுக்காக
9) பிரதான ஆணையாளர், ஆசிரியர் கல்விக் கிளை கல்வி அமைச்சு -நடவடிக்கைக்காக
10) கல்விப் பணிப்பாளர், தேசிய பாடசாலைகள் கிளை, கல்வி அமைச்சு -நடவடிக்கைக்காக
11) கல்விப் பணிப்பாளர், முறைசாரா மற்றும் விசேட கல்விக் கிளை, கல்வி அமைச்சு -நடவடிக்கைக்காக